# COPY OF DEPOSITION

இரண்டாம் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு.

அசல் வழக்கு எண்.360/2019

முதல் விசாரணை வா.சா.1 நாள் 02.03.2023

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 02ம் தேதி வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.அ.செல்வகுமார், பி.இ., பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : சந்திரசேகரன் | | ஜாதி | : |
| த/க பெயர் | : | | மதம் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| வட்டம் | : | | தொழில் | : |
| மாவட்டம் | : | | வயது | : |

**<u>வா.சா.1:முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாண வாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாண பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது நிருபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்க கோருகிறேன்.

12.10.1970ம் தேதியில் நாச்சிமுத்துகவுண்டர், ஆறுமுக கவுண்டர், சண்முகசுந்தரம் ஆகியோருடன் நான் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், 06.09.1991ம் தேதியில் சந்திரசேகரன் எனக்கு ராமசாமி மற்றும் சிலர் எழுதிக்கொடுத்த கிரய பத்திரதின் பதிவு நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 18.09.2007ம் தேதியிட்ட என்னுடைய தந்தை ஆறுமுக கவுண்டரின் இறப்பு சான்றிதழின் அசல் **வா.சா.ஆ.3** ஆகவும், 30.12.1991ம் தேதியிட்ட எனது தந்தை பெயரில் உள்ள படிவம் 4 மனைவரி தோராய பட்டாவின் உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆகவும், 21.01.2019ம் தேதியிட்ட எனது தந்தை பெயரில் உள்ள நத்தம் நிலவரித்திட்ட பூமி சிட்டாவின் உண்மை நகல் **வா.சா.ஆ.5** ஆகவும், 08.01.2019ம் தேதியிட்ட எனது தந்தை பெயரில் உள்ள

நத்தம் நிலவரித்திட்ட தூய அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் **வா.சா.ஆ.**6 ஆகவும், 19.01.2019 ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழின் வலைதள நகல் **வா.சா.ஆ.**7 ஆகவும், நான் தாக்கல் செய்த கேவியட் மனுவின் அலுவலக நகல் **வா.சா.ஆ.**8 ஆகவும், 28.02.2019 ம் தேதியில் எனக்கு 3 ம் பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பின் சார்வு நகல் **வா.சா.ஆ.**9 ஆகவும், 23.10.2020 ம் தேதியில் ஈரோடு மாவட்ட வருவாய் கோட்ட அலுவலர் பிறப்பித்த உத்தரவின் சார்வு நகல் **வா.சா.ஆ.**10 ஆகவும், 26.12.2020 ம் தேதியில் ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவின் சார்வு நகல் **வா.சா.ஆ.**11 ஆகவும் குறியீடு செய்கிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.**